# பெரியார் பல்கலைக்கழகம்

## சேலம் - 636 011

### பட்ட வகுப்பு – **CBCS** பாடமுறை

### பி.ஏ., தமிழ் இலக்கியம்

2008-2009 ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறைக்குரியது

**பாடச்சேர்க்கைத் தகுதி:**

பி.ஏ. தமிழ் இலக்கியப் பட்ட வகுப்பில் சேர விண்ணப்பிப்போர், பன்னிரண்டாம் வகுப்பில் தமிழை மொழிப்பாடமாகப் படித்துத் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். +2 பாடத்திட்டத்தில் சிறப்புத் தமிழ் படித்தோருக்கு முன்னுரிமை வழங்குதல் வேண்டும்.

**பாடத்திட்ட நோக்கம்:**

தமிழ் இலக்கிய இலக்கண வரலாறு, மொழி வரலாறு, தமிழகப் பண்பாட்டு வரலாறு ஆகிய பின்புலங்களைக் கற்பித்துத் தமிழ் இலக்கிய, இலக்கணங்களைக் கற்பித்தல்; எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்தமிழ் இலக்கணங்களின் அடிப்படை நிலைகளைக் கற்பித்தல்; சங்க காலம் முதல் இக்காலம் வரையிலான பல்வேறு காலகட்டங்களில் தோன்றிய பல்வேறு இலக்கியவகை மாதிரிகளைப் படிப்பித்தல்; தவறின்றி எழுதப் பயிற்றுவித்தல்; கவிதை, சிறுகதை, நாடகம், கட்டுரை போன்ற இலக்கிய வகைகளைப் புதியனவாகப் படைக்கும் ஆற்றலை வளர்த்தல்; இலக்கிய, இலக்கணங்களைத் திறனாய்வு செய்யும் திறனை வளர்த்தல்; புதிய சில தமிழ் இலக்கியக் களங்களை அறிமுகப்படுத்துதல்.

## பாடத்திட்ட அமைப்பு:

| பருவம் | பகுதி | தாள் குறியீட்டெண் | தாள் பெயர் | பயிற்றுக் காலம் - மணிகள் | அக மதிப்பெண்கள் | தேர்வு மதிப்பெண்கள் | மொத்த மதிப்பெண்கள் | மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| I | பகுதி -I | 08UFTA01 | தமிழ்-தாள்-1 | 6 | 25 | 75 | 100 | 3 |
| | பகுதி -II | 08UFEN01 | ஆங்கிலம்-தாள்-1 | 6 | 25 | 75 | 100 | 3 |
| | பகுதி -III | 08UTA01 | இலக்கணம் -1 (நன்னூல் காண்டிகை-பாயிரம் எழுத்து) | 5 | 25 | 75 | 100 | 4 |
| | | 08UTA02 | இக்கால இலக்கியமும் அயலகத் தமிழும் | 5 | 25 | 75 | 100 | 4 |
| | | 08UTAA01 | சார்புப் பாடம்-1 தமிழகப் பண்பாட்டு வரலாறு | 5 | 25 | 75 | 100 | 4 |
| | | 08UVEDN | மதிப்புக் கல்விப் பாடம் - மனவளக்கலை யோகா | 2 | 25 | 75 | 100 | 2 |
| | | 08UEVS | சுற்றுச்சூழலியல் | 1 | - | - | - | - |
| II | பகுதி -I | 08UFTA02 | தமிழ்-தாள்-2 | 6 | 25 | 75 | 100 | 3 |
| | பகுதி -II | 08UFEN02 | ஆங்கிலம்-தாள்-2 | 6 | 25 | 75 | 100 | 3 |
| | பகுதி -III | 08UTA03 | இலக்கணம்-2 (நன்னூல் காண்டிகை-சொல்லதிகாரம்) | 6 | 25 | 75 | 100 | 5 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 08UTAE01 | விருப்பப்பாடம்-1 பெண்ணியம் | 6 | 25 | 75 | 100 | 5 |
| | | 08UTAA02 | சார்புப் பாடம்- 2 தமிழ்மொழி வரலாறு | 5 | 25 | 75 | 100 | 4 |
| | | 08UEVS | சுற்றுச்சூழலியல் | 1 | 25 | 75 | 100 | 2 |
| III | பகுதி -I | 08UFTA03 | தமிழ்-தாள்-3 | 6 | 25 | 75 | 100 | 3 |
| | பகுதி -II | 08UFEN03 | ஆங்கிலம்-தாள்-3 | 6 | 25 | 75 | 100 | 3 |
| | பகுதி -III | 08UTA04 | சிற்றிலக்கியங்கள் | 5 | 25 | 75 | 100 | 5 |
| | | 08UTAA03 | சார்புப்பாடம் -3 தமிழ் இலக்கிய வரலாறு | 5 | 25 | 75 | 100 | 3 |
| | | 08UTASB01 | திறன்சார் விருப்பப்பாடம்-1 மொழி பெயர்ப்பியல் | 2 | 25 | 75 | 100 | 2 |
| | | 08UTASB02 | திறன்சார் விருப்பப்பாடம்-2 மனித உரிமைகள் | 2 | 25 | 75 | 100 | 2 |
| | | 08UTASB03 | திறன்சார் விருப்பப்பாடம்-3 இதழியல் | 2 | 25 | 75 | 100 | 2 |
| | | 08UTANM01 | துறைசாரா விருப்பப்பாடம்-1 சாலைப் பாதுகாப்பு விதிகள் | 2 | 25 | 75 | 100 | 2 |
| IV | பகுதி -I | 08UFTA04 | தமிழ்-தாள்-4 | 6 | 25 | 75 | 100 | 3 |
| | பகுதி -II | 08UFEN04 | ஆங்கிலம்-தாள்-4 | 6 | 25 | 75 | 100 | 3 |
| | பகுதி -III | 08UTA05 | இலக்கணம்-3 (புறப்பொருள் வெண்பாமாலை) | 5 | 25 | 75 | 100 | 5 |
| | | 08UTAA04 | சார்புப் பாடம்- 4 தமிழ் இலக்கண வரலாறு | 5 | 25 | 75 | 100 | 3 |
| | | 08UTASB04 | திறன்சார் விருப்பப்பாடம்-4 அழகுக் கலைகள் | 2 | 25 | 75 | 100 | 2 |
| | | 08UTASB05 | திறன்சார் விருப்பப்பாடம்-5 சுற்றுலாவியல் | 2 | 25 | 75 | 100 | 2 |
| | | 08UTASB06 | திறன்சார் விருப்பப்பாடம்-6 சித்தர்கள் தத்துவம் | 2 | 25 | 75 | 100 | 2 |
| | | 08UTANM02 | துறைசாரா விருப்பப்பாடம்-2 பேச்சுக்கலை | 2 | 25 | 75 | 100 | 2 |
| V | | 08UTA06 | இலக்கணம் -4 (யாப்பருங்கலக்காரிகை) | 5 | 25 | 75 | 100 | 4 |
| | | 08UTA07 | காப்பியங்கள் | 5 | 25 | 75 | 100 | 4 |
| | | 08UTA08 | சமயப்பாடல்கள் | 5 | 25 | 75 | 100 | 4 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 08UTA09 | திராவிட மொழிகளின் ஒப்பாய்வியல் | 5 | 25 | 75 | 100 | 5 |
| | | 08UTAE02 | விருப்பப்பாடம்-2 பொதுமொழியியல் | 5 | 25 | 75 | 100 | 5 |
| | | 08UTAA05 | சார்புப் பாடம்- 5 நாடகத்தமிழ் | 5 | 25 | 75 | 100 | 3 |
| VI | | 08UTA10 | இலக்கணம் - 5 தண்டியலங்காரம்) | 5 | 25 | 75 | 100 | 5 |
| | | 08UTA11 | சங்க இலக்கியம் | 5 | 25 | 75 | 100 | 5 |
| | | 08UTA12 | நீதி இலக்கியம் | 5 | 25 | 75 | 100 | 5 |
| | | 08UTA13 | இலக்கியத் திறனாய்வியல் | 5 | 25 | 75 | 100 | 5 |
| | | 08UTAE03 | விருப்பப்பாடம்-3 செயல்முறைத் தமிழ் | 5 | 25 | 75 | 100 | 5 |
| | | 08UTAA06 | சார்புப் பாடம்- 6 நாட்டுப்புறவியல் | 5 | 25 | 75 | 100 | 3 |
| | | | விரிவாக்கச் செயல்பாடுகள் | | | | | 1 |

**வினாத்தாள் அமைப்பு**

**காலம்: 3 மணிகள்** **மொத்த மதிப்பெண்கள்: 75**

**பகுதி – அ** **(10x2=20)**

அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வோரலகிலும் இருவினாக்கள் வீதம் பத்துக் குறுவினாக்கள் அமைதல் வேண்டும்.

**பகுதி – ஆ** **(5x5=25)**

அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ஒவ்வோரலகிலும் ஒவ்வொரு சிறு வினாவைக் கட்டாயமாகக் கேட்டல் வேண்டும். (இது அல்லது அது என்ற முறை)

**பகுதி – இ** **(3x10=30)**

ஒவ்வோரலகிலும் ஒவ்வொரு பெருவினாவைக் கட்டாயமாகக் கேட்டல் வேண்டும். இதில் எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**குறிப்பு:** ‘அ’ வில் 1 முதல் 10 வரையும் பகுதி ‘ஆ’ வில் 11 முதல் 15 வரையும் பகுதி ‘இ’ யில் 16 முதல் 20 வரையும் வினா எண்கள் அமையும்.

**முதல் பருவம்**

**முதன்மைப் பாடம்: தாள் 1**

**இலக்கணம் -1**

**(நன்னூல் காண்டிகை – பாயிரம், எழுத்து)**

| | |
|---|---|
| **அலகு 1** | : பாயிரம் (பொதுப்பாயிரம், சிறப்புப் பாயிரம்) |
| **அலகு 2** | : எழுத்தியல் |
| **அலகு 3** | : பதவியல் |
| **அலகு 4** | : உயிரீற்றுப் புணரியல் |
| **அலகு 5** | : மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் |
| **பாட நோக்கம்** | : தமிழின் ஐந்திலக்கணங்களுள் முதலாவதான எழுத்திலக்கணத்தை அறிவுறுத்துதல். |

**முதன்மைப் பாடம் : தாள் 2**

**இக்கால இலக்கியமும் அயலகத் தமிழும்**

| | | | |
|---|---|---|---|
| **அலகு 1:** | (அ) பாரதியார் | - | பாஞ்சாலி சபதம் |
| | (ஆ) பாரதிதாசன் | - | சஞ்சீவி பர்வதத்தின் சாரல் |
| **அலகு 2:** | 'தீவெளி' – லதா (சிங்கப்பூர் கவிஞர்) | - | சுதர்சன் புக்ஸ், 74, மணிமேடை கீழ்ப்புறம், நாகர்கோவில்-629001 |

**அலகு 3: (உரைநடை)**

அப்துல் ரகுமான் - 'முட்டைவாசிகள்"- நேஷனல் பப்ளிஷர்ஸ்,
2, வடக்கு உஸ்மான் சாலை,
தியாகராய நகர்,
சென்னை- 600 017.

**அலகு 4:**

| | | |
|---|---|---|
| அ) 'வாசல் ஒவ்வொன்றும்' (ஈழத்துச் சிறுகதைகள்) | - | விடியல் பதிப்பகம், கோவை-641015. |
| ஆ) எஸ்.பொ. – "சடங்கு" (ஈழத்துப் புதினம்) | - | மித்ர வெளியீடு, 375/8-10, ஆர்க்காடு சாலை, சென்னை – 600 024. |

**அலகு 5: (நாடகம்)**

அ) அறிஞர் அண்ணா - 'வேலைக்காரி' - பூம்புகார் பதிப்பகம்,
63, பிராட்வே,
சென்னை – 103.

ஆ) பம்மல் சம்பந்தம் - 'சந்திரஹரி' - முல்லை நிலையம்,
9, பாரதி நகர் முதல் தெரு,
தி.நகர்,
சென்னை- 600 017.

**பாட நோக்கம்:**

இக்காலத் தமிழக இலக்கிய வகைமைகளின் மாதிரிகளைக் கற்பித்தல்: அயல்நாட்டுத் தமிழர்களின் இலக்கிய ஆக்கங்களை அறிமுகப்படுத்துதல்.

**குறிப்பு:**

முதலிரண்டு அலகுகளிலிருந்து மட்டும் இடம் சுட்டிப் பொருள் விளக்கும் வினாக்கள் அமையும்.

## சார்புப் பாடம் : தாள் 1

## தமிழகப் பண்பாட்டு வரலாறு

**அலகு 1**: சங்ககாலத் தமிழக அரசியல் நிலை – போர்முறை – சமூக அமைப்பு – திருமண முறை – வணிகம் - உணவு, உடை, உறையுள் அணிகலன்கள் - கல்வி – பொழுதுபோக்கு, நம்பிக்கைகள் - அறம்.

**அலகு 2**: தமிழர்தம் கலைகள் - இசைக்கலை – சிற்பக்கலை – கட்டடக்கலை – ஓவியக்கலை - கூத்துக்கலை – நாடகக்கலை – மருத்துவக் கலை.

**அலகு 3:** தமிழர் சமய வரலாறு – சைவம் - வைணவம் - சமணம் - பௌத்தம்- இசுலாம் - பகுத்தறிவு இயக்கம்.

**அலகு 4**: தமிழர் நீதி வரலாறு – வரிகள் - உள்ளாட்சி மன்றங்கள் - சாதி வளர்ச்சி – சாதியொழிப்பு – மகளிர் நிலை - இந்தியப் பண்பாட்டில் தமிழ்ப் பண்பாட்டுக் கூறுகள்-

**அலகு 5**: தமிழ்ப் பண்பாட்டில் ஆங்கில ஆட்சிச் செல்வாக்கு – மராட்டியர் செய்த நன்மைகள் - வாய்மொழி இலக்கியங்களும் தமிழ்ப் பண்பாடும் - சமயப் பொதுநோக்கு – பண்பாட்டு ஊடாட்டம்.

**பாடநோக்கம்:**

தமிழ் இலக்கியங்கள் தோன்றியமைக்கான சமுதாயப் பின்னணிகளைக் கற்பித்தல்.

**பாடநூல்:**

1) முனைவர் அ. தட்சிணாமூர்த்தி – 'தமிழர் நாகரிகமும் பண்பாடும்'
யாழ் வெளியீடு, AP 1108.
தென்றல் குடியிருப்பு,
மூன்றாம் தெரு, மேற்கு அண்ணாநகர்,
சென்னை – 600 040.

**பார்வை நூல்கள்:**

1. டாக்டர் கே. கே. பிள்ளை - "தமிழக வரலாறு – மக்களும் பண்பாடும்"
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை-600 013.

2. வே.தி. செல்வம் - "தமிழக வரலாறும் - பண்பாடும்"
மணிவாசகர் பதிப்பகம்,
31, சிங்கர் தெரு,
பாரிமுனை,
சென்னை – 600 108.

3. முனைவர் பா. இறையரசன் - "தமிழர் நாகரிக வரலாறு"
பூம்புகார் பதிப்பகம்,
63, பிராட்வே,
சென்னை – 600 108.

4. பேராசிரியர் கோ. தங்கவேலு -
i) "தாய் நில வரலாறு" (பாகம் - 1)
அமிழ்தம் பதிப்பகம்,
328/10, திவான் சாகிப் தோட்டம்,
டி.டி.கே. சாலை
ii) "தமிழகச் சமூகப் பண்பாட்டு வரலாறு" (பாகம்-2)
இராயப்பேட்டை,
சென்னை-600014.

**மதிப்புக் கல்விப்பாடம்**

(Value Education)

**மனவளக்கலை யோகா**

**அலகு 1: யோகமும் உடல்நலமும்**

உடலமைப்பு – எளியமுறை உடற்பயிற்சி – மகராசனம் - யோகாசனங்கள்

**அலகு 2: உயிர்வளமும் மனவளமும்**

இளமைகாத்தல் - பாலுணர்வும் ஆன்மீகமும் - மனதின் 10 படிநிலைகள் - மன அலைச்சுழல்.

**அலகு 3: குணநலப்பேறு**

வாழ்வின் நோக்கம் - எண்ணம் ஆராய்தல் - ஆசை சீரமைத்தல் - சினம் தவிர்த்தல்.

**அலகு 4: மனிதவள மேம்பாடு**

கவலை ஒழித்தல் - வாழ்த்தும் பயனும் - நட்பு நலம் - தனிமனித அமைதி.

**அலகு 5: இயற்கை நியதி**

செயல்விளைவுத் தத்துவம் - மனத்தூய்மை, வினைத்தூய்மை – அன்பும் கருணையும் - பண்பாட்டுக் கல்வி.

**பாடநோக்கம்:**

இளம் வயது முதலே உடலையும், மனதையும் பக்குவமாகப் பராமரிக்க வேண்டியதன் அவசியத்தை மாணவர்கள் உணரச் செய்தலே இப்பாடத்திட்டத்தின் நோக்கமாகும்.

**குறிப்பு:**

**2006-2007-ஆம் கல்வியாண்டு முதன்மைப் பாடத்திட்டம் - முதல் பருவம் - முதன்மைப்பாடம் தாள்: 2 இக்கால இலக்கியமும் அயலகத் தமிழும்**

**நீக்கம் செய்யப்பட்ட பகுதிகள்**

அலகு 1 : (இ) மீரா – 'குக்கூ'- அகரம், 1, நிர்மலா நகர்,
தஞ்சாவூர்-613007.

அலகு 2: அ) வேற்றாகி நின்ற வெளி' – விடியல் பதிப்பகம்
(ஈழத்துக் கவிதைகள்) கோவை-641015.

அலகு 5: (நாடகம்)

அ) அறிஞர் அண்ணா(i) 'ஓர் இரவு' – பாரிநிலையம், சென்னை-1

இ) கலைமாமணி முனைவர் - 'மேகம் மறைத்த நிலா' -அன்புப் பதிப்பகம்,
கரு. நாகராசன் (வானொலி நாடகம்) 316, என்.ஜி.ஓ. காலனி
செங்கற்பட்டு-603001.

**மற்ற பாடப்பகுதிகளில் மாற்றம் ஏதும் இல்லை.**

**இரண்டாம் பருவம்**

**முதன்மைப் பாடம் : தாள் 3**

**இலக்கணம் - 2**

**(நன்னூல் காண்டிகை – சொல்லதிகாரம்)**

**அலகு 1**: பெயரியல்

**அலகு 2**: வினையியல்

**அலகு 3:** பொதுவியல்

**அலகு 4**: இடையியல்

**அலகு 5**: உரியியல்

**பாடநோக்கம்**: நால்வகைச் சொற்களின் இலக்கணத்தைத் தெளிவுறுத்தல்

**விருப்பப் பாடம் : தாள் 1**

**பெண்ணியம்**

**அலகு 1**: பெண்ணியம் - விளக்கம் - பெண்ணியம் தோன்றக் காரணங்கள் - பெண்களுக்கு வாக்குரிமை – பெண்ணியத்தின் தேக்க நிலை.

**அலகு 2:** பெண் விடுதலை இயக்கம் - பெண்ணியத்தின் வளர்ச்சி – பெண்ணியக் கோட்பாடுகள்.

**அலகு 3:** பழமைவாதக் குடும்பம் சார்ந்த பெண்ணியம் - இந்தியப் பெண்ணியம் அறிமுகம் - இந்தியப் பெண்களின் சமூகநிலை.

**அலகு 4:** முயற்சிகளும் சமூக மாற்றங்களும் - பெண்களும் சட்டங்களும் - பெண்கள் முன்னேற்றத்தில் அரசின் கொள்கைகள்.

**அலகு 5:** மகளிர் தற்சார்பு அமைப்புகள் - மேலை நாட்டுப் பெண்ணியம் இந்தியப் பெண்ணியம் வேறுபாடுகள் - இந்தியப் பெண்களின் நிலையை உயர்த்தும் வழிமுறைகள்.

**பாடநோக்கம்:** பெண்ணியத்தின் தோற்றம் வளர்ச்சி பற்றியும் பெண்ணியக் கோட்பாடுகள் பற்றியும் மாணவர்கள் அறியச் செய்தல்.

**பாடநூல்:**

முனைவர் (திருமதி) ச. முத்துச்சிதம்பரம், ‘பெண்ணியம் தோற்றமும் வளர்ச்சியும்’ – முத்துப் பதிப்பகம், திருநெல்வேலி-627002.

**பார்வை நூல்கள்:**


1. முனைவர். இரா. ரெங்கம்மாள் முவைர். சி. வாசுகி - 'பெண்ணியம் அணுகு முறைகளும் இலக்கியப் பயன்பாடும்' – அறிவுப் பதிப்பகம், 142, ஜானி ஜான்கான் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.
2. முனைவர். அரங்க மல்லிகா - 'தமிழ் இலக்கியமும் பெண்ணியமும்' நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை-600098.
3. முனைவர். இரா. பிரேமா - 'பெண்ணியம் அணுகு முறைகள்' தமிழ்ப் புத்தகலாயம், 15, மாசிலாமணிதெரு, பாண்டி பஜார், தி.நகர், சென்னை-17.


## சார்புப் பாடம் : தாள் 2
## தமிழ் மொழி வரலாறு

**அலகு 1:** மொழி வரலாற்றுச் சான்றுகள் - தொல் திராவிடம் - தொல்காப்பியத் தமிழ் - சங்ககாலத் தமிழ் - தமிழ் பிராமிக் கல்வெட்டுத் தமிழ்.

**அலகு 2:** பல்லவர்காலத் தமிழ் - இடைக்காலத் தமிழ் - சோழர்காலத் தமிழ் - நாயக்கர் காலத்தமிழ் - மராட்டியர்காலத் தமிழ்.

**அலகு 3:** இக்காலத் தமிழ் - உரைநடையில் பிறமொழிச் சொற்கள் - அறிவியல் தமிழ் - கலைச் சொல்லாக்கம் - மொழி பெயர்ப்பு – வானொலி – தொலைக் காட்சித் தமிழ்.

**அலகு 4:** கல்வெட்டுத் தமிழ் - உயிரொலி மாற்றங்கள், மெய்யொலி மாற்றங்கள்- தமிழ்க் கிளைமொழிகள்.

**அலகு 5:** தமிழ் வரிவடிவ வரலாறு – தொல்காப்பியர் காலம் - இடைக்காலம் - எழுத்துச் சீர்திருத்தம் - வீரமாமுனிவரும் பெரியாரும் - வா.செ. குழந்தைசாமி.

**பாடநோக்கம்:**

தொன்மைக் காலத்திலிருந்து இக்காலம் வரை தமிழ் ஒலி வடிவ, வரிவடிவ, சொற்பொருள் மாற்றங்களை அறிவித்தல். பிற மொழிகளின் மீது தமிழின் தாக்கத்தையும் தமிழின் மீது பிறமொழிகளின் தாக்கங்களையும் உணர்த்துதல்.

**பாடநூல்:**

டாக்டர். சு. சக்திவேல் - 'தமிழ் மொழி வரலாறு'
மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை 600108.

**பார்வை நூல்கள்:**

1. டாக்டர். தெ.பொ.மீ. - 'தமிழ் மொழி வரலாறு'
சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை.
2. டாக்டர். மு.வ., - 'மொழி வரலாறு'
சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை.

## சுற்றுச்சூழலியல்

**அலகு 1:** சுற்றுச் சூழல் - விளக்கம் - சுற்றுச் சூழலின் அங்கங்கள் - மனிதனும் சுற்றுச் சூழலும் - இயற்கை வளங்கள் - காட்டு வளம் - நீர்வளம் - தாதுவளம்.

**அலகு 2:** உணவு வளங்கள் - ஆற்றல் வளங்கள் - நில வளங்கள் - சூழ்நிலை மண்டலம் - ஆக்கக் கூறுகள் - சூழ்நிலை மண்டலத்தின் உணவு நிலைகள் - சூழ்நிலை மண்டலத்தின் வகைகள்.

**அலகு 3:** பல்லுயிரின வேறுபாடும் அதன் பாதுகாப்பும் - காற்று மாசுபாடு – நீர், மண், கடல் நீர் மாசுபாடு.

**அலகு 4:** இரைச்சல் மாசுபாடு – அனல் மாசுபாடு – அணுக்கதிர் வீச்சு மாசுபாடு – திடக்கழிவு மேலாண்மை – சமுதாயப் பிரச்சனைகளும் சுற்றுச்சூழலும் - பசாங்கூட விளைவும் உலகச் சூடேற்றமும்.

**அலகு 5:** அமிலமழை – ஓசோனும் அதன் குறைதலும் - சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டங்கள் - மக்கள் தொகைப் பெருக்கமும் சுற்றுச்சூழலும்.

**பாட நோக்கம்:**
சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் முறைகளைப் பற்றி மாணவர்கள் அறியச் செய்தல்.

**பாடநூல்:**
பேரா. ஜே. தர்மராஜ் - 'சுற்றுச்சூழல் இயக்கம்' - டென்சி பப்ளிகேஷன்ஸ்,
டென்சி வில்லா,
6/229, அண்ணாமலையார் காலனி,
சிவகாசி-626123.

**பார்வை நூல்கள்:**

1. டாக்டர். சுசிலா அப்பாதுரை – 'சுற்றுச்சூழல் கல்வி'
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,
41, பி, சிட்கோ இண்டஸ்டிரியஸ் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-600098.

2. இரா. பசுமைக்குமார் - ‘தமிழக சுற்றுச் சூழல்’
தாமரை பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்,
41, பி, சிட்கோ இண்டஸ்டிரியஸ் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-600098.

**மூன்றாம் பருவம்**

**முதன்மைப் பாடம் : தாள் 4**

**சிற்றிலக்கியங்கள்**

**அலகு** 1:

(அ) முத்தொள்ளாயிரம் - சோழன் பற்றிய பாடல்கள்

(ஆ) நந்திக் கலம்பகம் - தனிப்பாடல்கள் 1 முதல் 20 வரை (“என்னை யானே” முதல் “செய்ய கமலத்திரு” வரை)

**அலகு** 2:

(அ) நளவெண்பா – சுயம்வரகாண்டம் - 1 முதல் 25 வரையிலான பாடல்கள் (புகழேந்தி)

(ஆ) கலிங்கத்துப் பரணி – காடுபாடியது, கோயில் பாடியது. (ஜெயங்கொண்டார்)

**அலகு** 3:

(அ) முக்கூடற்பள்ளு – நாட்டு வளம் கூறல்
“மேடையேறி” பாடல் முதல்
“பொருநையந் திருநதி” பாடல் வரை.

(ஆ) திருச்செந்தூர் முருகன் பிள்ளைத்தமிழ் - முத்தப்பருவம். (பகழிக் கூத்தர்)

**அலகு** 4:

(அ) தமிழ் விடு தூது – கண்ணிகள் 1 முதல் 100 வரை

(ஆ) குற்றாலக் குறவஞ்சி (திரிகூடராசப்பக் கவிராயர்) – வசந்தவல்லி பந்தாடல் - “செங்கையில் வண்டு” பாடல் முதல் “படியேழுடையார்” பாடல் வரை.

**அலகு 5:**

(அ) கொங்கு மண்டல சதகம் - 26 முதல் 50 வரையிலான பாடல்கள்.
(வால சுந்தரக் கவிராயர்)

(ஆ) அபிராமி அந்தாதி – 1 முதல் 20 வரையிலான பாடல்கள்.
(அபிராமி பட்டர்)

**பாடநோக்கம்:**

தமிழில் உள்ள தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்களுள் செல்வாக்குப் பெற்ற சில வகைகளின் மாதிரிகளைக் கற்பித்தல்.

**குறிப்பு:** முதலிரண்டு அலகுகளிலிருந்து மட்டும் இடம் சுட்டிப் பொருள் விளக்கும் வினாக்கள் அமையும்.

## சார்புப் பாடம் : தாள் 3

## தமிழ் இலக்கிய வரலாறு

**அலகு 1:**

சங்க காலம் - முச்சங்கங்கள் - பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் - பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் - இரட்டைக் காப்பியங்கள் - தகடூர் யாத்திரை – முத்தொள்ளாயிரம்.

**அலகு 2:**

பக்தி இயக்கம் - பன்னிரு திருமுறை – நாலாயிர திவ்யப் பிரபந்தம் - நந்திக் கலம்பகம் - பெருங்கதை – சீவக சிந்தாமணி – பாரத வெண்பா – ஐஞ்சிறு காப்பியங்கள் - வளையாபதி – குண்டலகேசி – நாதமுனிகள் - பெரியபுராணம் - கம்பராமாயணம் - கந்தபுராணம் - ஒட்டக்கூத்தர் - நளவெண்பா – கலிங்கத்துப்பரணி.

**அலகு 3:**

சைவ சாத்திரங்கள் - சித்தர் பாடல்கள் - தஞ்சைவாணன் கோவை – உரையாசிரியர்கள் - பரஞ்சோதி திருவிளையாடல் புராணம் - சைவ மடங்கள் - அஷ்ட பிரபந்தம் - பட்டினத்தார் - வில்லி பாரதம் - அருணகிரியார் - அதிவீரராம பாண்டியர் - காளமேகம் - ஔவையார் - இரட்டைப் புலவர்கள்.

**அலகு 4:**

குமரகுருபரர் - சிவப்பிரகாசர் - தாயுமானவர் - படிக்காசுப் புலவர் - நல்லாப்பிள்ளை பாரதம் - சீறாப்புராணம் - குறவஞ்சி – பள்ளு – தமிழ் விடுதூது – அருணாச்சலக் கவிராயர் - இராமலிங்க அடிகள் - கோபால கிருஷ்ண பாரதியார் - மஸ்தான் சாகிபு – தத்துவப் போதகர் - வீரமாமுனிவர் - கால்டுவெல் - ஜி.யு.போப் - இரட்சண்ய யாத்ரிகம்.

**அலகு 5:**

ஆறுமுக நாவலர் - சி.வை. தாமோதரனார் - விபுலானந்த அடிகள் - மனோன்மணியம் - சங்கரதாஸ் சுவாமிகள் - பம்மல் சம்பந்தனார் - பரிதிமாற் கலைஞர் - உ.வே.சா. – தனித்தமிழ் இயக்கம் - மறைமலையடிகள் - திரு.வி.க. – தமிழ் நாடக வளர்ச்சி – புதினம் - சிறுகதை – மரபுக் கவிதை – புதுக்கவிதை – அயல் நாடுகளில் தமிழ்.

**பாடநோக்கம்:**

தொன்று தொட்டு இன்று வரை தமிழில் தோன்றிய இலக்கிய நூல்களை வரலாற்று நோக்கில் கற்பித்தல்.

**பாடநூல்:**

மது.ச. விமலானந்தம் - 'தமிழ் இலக்கிய வரலாறு'
அபிராமி பதிப்பகம்,
7-பி, கொடிமரத்தெரு,
இராயபுரம்,
சென்னை-600013.

**பார்வை நூல்கள்:**

1. டாக்டர்.மு.வரதராசன் - 'தமிழ் இலக்கிய வரலாறு'
   சாகித்திய அகாதெமி, டெல்லி.
2. ஜெ. ஸ்ரீசந்திரன் - 'தமிழ் இலக்கிய வரலாறு'
   வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17.

## திறன்சார் விருப்பப் பாடம் : தாள் 1

## (Skill Based Elective Course)

## மொழி பெயர்ப்பியல்

**அலகு 1:**

மொழி பெயர்ப்பின் தோற்றமும் வளர்ச்சியும் - மொழிபெயர்ப்பு விளக்கம்.

**அலகு 2:**

மொழி பெயர்ப்பு வகைகளும் கோட்பாடுகளும் - மொழி பெயர்ப்பில் நிகரன்கள்.

**அலகு 3:**

மொழி பெயர்ப்புச் சிக்கல்கள்.

**அலகு 4:**

கலைச் சொல்லாக்கம் - மொழி பெயர்ப்பாளர் தகுதிகள் - மொழி பெயர்ப்பின் பயன்.

**அலகு 5:**

தமிழில் மொழி பெயர்ப்புகள் - விவிலிய மொழி பெயர்ப்புகள்

**பாடநோக்கம்:**

தமிழில் மொழி பெயர்ப்புப் பற்றி அறிவித்தல் - மொழி பெயர்ப்பின் இன்றியமையாமையும் அதன் சிறப்புகளையும் உணர்த்துதல் - மொழி பெயர்ப்பில் உள்ள சிக்கல்களையும் அவற்றைக் களைவதற்கான வழிமுறைகளையும் கற்கச் செய்தல்.

**பாடநூல்:**

1. ந. முருகேச பாண்டியன் - 'மொழி பெயர்ப்பியல்'
   உயிர் எழுத்து பதிப்பகம்,
   9-முதல் தளம், தீபம் வணிக வளாகம்,
   கருமண்டபம், திருச்சி.

**பார்வை நூல்கள்:**

1. முனைவர். ச. ஈஸ்வரன் - 'மொழிபெயர்ப்பியல்' –
   பாவை பப்ளிகேசன்ஸ்,
   142, ஜானிஜான் கான்சாலை,
   இராயப்பேட்டை, சென்னை-600014.
2. வீ. சந்திரன் - 'மொழி பெயர்ப்புச் சிக்கல்களும் தீர்வுகளும்' –
   ராஜகுமார் பப்ளிகேசன்ஸ், சென்னை-600050.

**திறன்சார் விருப்பப் பாடம் : தாள் 2**

(Skill Based Elective Course)

**மனித உரிமைகள்**

**அலகு 1:**

மனித உரிமைகள் - வகைகள் - வளர்ச்சிக் களங்கள்.

**அலகு 2:**

அடிப்படை உரிமைகள் - மனித உரிமைகளின் ஊற்றுக்கண் - மனித உரிமைகள் தொடர்பான இந்திய சட்டங்கள் - அமைப்புகள்.

**அலகு 3:**

மனித உரிமை ஆணையம் - அமைப்பும் செயல்பாடுகளும்.

**அலகு 4:**

கைது, வராண்ட் விளக்கம் - கைது செய்யப்பட்டவர்களின் உரிமைகள் - மனித உரிமைகள் குறித்த சாசனங்கள்.

**அலகு 5:**

உலக மனித உரிமைகள் பிரகடனம் - பன்னாட்டு உடன்பாடு – பன்னாட்டு ஒப்பந்தங்கள்.

**பாடநோக்கம்:**

சமுதாயத்தில் தனிமனிதனுடைய உரிமைகள் பற்றி மாணவர்கள் அறியச் செய்தல்.

**பாடநூல்:**

பேரா. இராஜ முத்திருளாண்டி – 'மனித உரிமைகள்' – NCBH
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியஸ் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-600098.

**பார்வை நூல்கள்:**

1. சு.பொ. அகத்தியலிங்கம் - 'மனித உரிமைகள்' –
தமிழ்ப் புத்தகாலயம்,
ப்ளாட் எண். G3/8, மாசிலாமணி தெரு,
தி.நகர், சென்னை-600017.
2. வ.நா. விஸ்வநாதன் - 'மனித உரிமைகள்' –
பாவை பப்ளிகேசன்ஸ்,
142, ஜானி ஜான் கான்சாலை,
இராயப்பேட்டை, சென்னை-14.

**திறன்சார் விருப்பப் பாடம் : தாள் 3**

(Skill Based Elective Course)

**இதழியல்**

**அலகு 1:**

இதழியல் விளக்கம் - மக்கள் தொடர்புச் சாதனங்கள் - மக்கள் தொடர்புக் கருவிகளில் பத்திரிக்கைகள் - பத்திரிக்கைகளின் பணிகள் - இதழியல் விதிகள் - பத்திரிக்கைகளின் பொறுப்புக்களும் கடமைகளும் - மக்களாட்சியில் பத்திரிக்கைகளின் பங்கு.

**அலகு 2:**

செய்தித் தாளின் தோற்றம் - இந்திய இதழியல் - இந்திய விடுதலைப் போராட்டத்தில் இதழ்களின் பங்கு – தமிழ் இதழ்கள்.

**அலகு 3:**

செய்தி வகைகள் - களங்கள் - செய்தியாளர்கள் செய்தி சேகரிப்பு – செய்திகள் எழுதும் முறை – பேட்டி – தலைப்பு – தலையங்கம் - பக்க அமைப்பு – செய்தி நிறுவனங்கள்.

**அலகு 4:**

இதழியல் சட்டங்கள் - பத்திரிக்கை கவுன்சில் - இதழ்களின் சுதந்திரம் - இதழ்களின் நடத்தையறம் - இன்றைய இதழியல் - நிர்வாக அமைப்பு.

**அலகு 5:**

இதழ்களின் பகுப்பும் அமைப்பும் - இதழ்களில் இடம் பெறுவன – விளம்பரங்கள் - புலனாய்வு இதழ்கள் - நச்சு இதழ்கள்.

**பாடநோக்கம்:**

இலக்கியத்தோடு மிக நெருங்கிய தொடர்பினைக் கொண்டுள்ள இதழியல் பற்றி மாணவர்கள் அறியச் செய்தல்.

**பாடநூல்:**

முனைவர். ச. ஈஸ்வரன்
முனைவர். இரா.சபாபதி } "இதழியல்" – பாவை பப்ளிகேசன்ஸ்,
142, ஜானி ஜான்கான் சாலை,
இராயப்பேட்டை, சென்னை-600014.

**பார்வை நூல்கள்:**

1. மா.பா. குருசாமி – "இதழியல் கலை" – குரு-தேமொழி,
117, சன்னதித் தெரு,
திருச்செந்தூர்-628215.
2. டாக்டர். வெ. கிருட்டிணசாமி – "தகவல் தொடர்பியல்" – மணிவாசகர் பதிப்பகம்,
31, சிங்கர் தெரு.
பாரிமுனை,
சென்னை-600108.

**துறை சாரா விருப்பப் பாடம் : தாள் 1**

(Non Major Elective Course)

**சாலைப் பாதுகாப்பு விதிகள்**

**அலகு 1:**

பாதசாரிகளுக்கான பாதுகாப்பு விதிமுறைகள் - மிதிவண்டி ஓட்டுவோருக்கான விதிகள் - பொதுவான விதிமுறைகள்.

**அலகு 2:**

இருசக்கர வாகன ஓட்டிகள் - கார் மற்றும் கனரக வாகன ஓட்டிகள் கவனத்திற்கு – வழுக்குதலின் வகைகள் - சைகைகள்.

**அலகு 3:**

வாகன ஓட்டுநரின் தவறான பழக்க வழக்கங்கள் - அனுபவமின்மை – கவனக் குறைவு – அதிவேகம்.

**அலகு 4:**

தவறாக முந்துதல் - தவறாகத் திருப்புதல் - இடைவெளியின்றி பின் தொடரல் - வாகனங்களைத் தவறாக நிறுத்துதல்.

**அலகு 5:**

வாகனத்தைத் தவறாகப் பின்னோக்கிச் செலுத்துதல் - தவறாகச் சந்திப்பைக் கடத்தல் - அதிக சுமையேற்றல் - மலைப் பகுதியில் தவறாகச் செலுத்துதல் - சாலை விதிகளை மீறுதல்.

**பாடநோக்கம்:**

வாகனத்தைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருவது போல் விபத்துக்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது. காரணம் சாலை விதிகளைக் கடைப்பிடிக்காமையே. ஆகவே இளமை முதலே மாணவர்கள் சாலை விதிகளை அறிந்து அதனைக் கடைப்பிடிக்க அறிவுறுத்தல்.

**பாடநூல்கள்:**

1. கலவை முபாரக் அலி - ‘சாலை விதிகளும் பாதுகாப்பும்’ நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியஸ், சென்னை-600098.
2. ச. அய்யாத்துரை - ‘வாகன விபத்துக்களைத் தவிர்ப்பது எப்படி’ நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியஸ், சென்னை-600098.

**பார்வை நூல்:**

பி.டி.அலி - ‘விபத்தைத் தடுப்போம் உயிரைக் காப்போம்’
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியஸ்,
சென்னை-600098.

**நான்காம் பருவம்**

**முதன்மைப் பாடம் : தாள் 5**

**இலக்கணம் - 3**

(புறப்பொருள் வெண்பாமாலை - பாடாண்திணை வரை)

**அலகு 1:**

வெட்சிப்படலம், கரந்தைப் படலம்.

**அலகு 2:**

வஞ்சிப்படலம், காஞ்சிப்படலம்.

**அலகு 3:**

நொச்சிப்படலம், உழிஞைப்படலம்.

**அலகு 4:**

தும்பைப்படலம், வாகைப்படலம்.

**அலகு 5:**

பாடாண் படலம்.

**பாடநோக்கம்:**

புறப்பொருள் இலக்கணம் அறியச் செய்தல்.

**சார்புப் பாடம் : தாள் 4**

**தமிழ் இலக்கண வரலாறு**

**அலகு 1:**

இலக்கண வரலாறு – அகத்தியம் - தொல்காப்பியம்.

**அலகு 2:**

இறையனார் அகப்பொருள் - அவிநயம் - காக்கை பாடினியம் - புறப்பொருள் வெண்பாமாலை – தமிழ்நெறி விளக்கம் - யாப்பருங்கலக்காரிகை - வீரசோழியம் - வச்சணந்தி மாலை.

**அலகு 3:**

நேமிநாதம் - வெண்பாப் பாட்டியல் - தண்டியலங்காரம் - நன்னூல் - அகப்பொருள் விளக்கம் - பன்னிரு பாட்டியல் - திவாகரம் - பிங்கலந்தை – உரிச்சொல் நிகண்டு – சூடாமணி.

**அலகு 4:**

நவநீதப் பாட்டியல் - வரையறுத்தப் பாட்டியல் - சிதம்பரப் பாட்டியல் - மாறனலங்காரம் - மாறனகப்பொருள் - பாப்பாவினம் - சிதம்பர செய்யுட் கோவை – பிரயோக விவேகம் - இலக்கண விளக்கம் - இலக்கணக் கொத்து.

**அலகு 5:**

தொன்னூல் விளக்கம் - பிரபந்தத் தீபிகை – முத்து வீரியம் - சுவாமிநாதம் - சந்திராலோகம் - குவலயானந்தம் - மறைந்து போன நூல்கள்.

**பாடநோக்கம்:**

தொன்று தொட்டுத் தமிழில் தோன்றிய இலக்கண நூல்களின் வரலாற்றை மாணவர்க்குக் கற்பித்தல்.

**பாடநூல்:**

சோம. இளவரசு - 'இலக்கண வரலாறு'
மெய்யப்பன் பதிப்பகம்,
53, புதுத்தெரு, சிதம்பரம்-608001.

**பார்வைநூல்:**

புலவர். இரா. இளங்குமரன் - 'இலக்கண வரலாறு'
மணிவாசகர் பதிப்பகம்,
31, சிங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600108.

## திறன்சார் விருப்பப் பாடம் : தாள் 4

(Skill Based Elective course)

## அழகுக் கலைகள்

**அலகு 1:**

அழகுக் கலைகள் - கட்டிடக் கலை – சிற்பக்கலை.

**அலகு 2:**

ஓவியக் கலை - இசைக் கலை.

**அலகு 3:**

ஆடல்கள் - நாட்டியக் கலை.

**அலகு 4:**

இலக்கியக்கலை – நாடகக்கலை.

**அலகு 5:**

வரிக்கூத்து – சொல் - கலைகளைப் போற்றல்.

**பாடநோக்கம்:**

மறைந்து கொண்டிருக்கிற அழகுக் கலைகள் பற்றிய மேல் வரம்பான பொதுத் தன்மையை மாணவர்கள் அறியுமாறு செய்தல்.

**பாடநூல்:**

மயிலை.சீனி. வேங்கடசாமி - 'தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்'
நாம் தமிழர் பதிப்பகம்,
நெ.6, தோப்பு வெங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-600005.

**பார்வை நூல்கள்:**

1. மயிலை.சீனி. வேங்கடசாமி - 'நுண்கலைகள்'
   நாம் தமிழர் பதிப்பகம்,
   நெ.6, தோப்பு வெங்கடாசலம் தெரு,
   திருவல்லிக்கேணி, சென்னை-600005.
2. நாகசாமி - 'தமிழர் கோயில் கலைகள்'
   தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை,
   சென்னை.

## திறன்சார் விருப்பப் பாடம் : தாள் 5

(Skill Based Elective course)

### சுற்றுலாவியல்

**அலகு 1:**

சுற்றுலாவியல் - விளக்கம் - உலகநாடுகளில், இந்தியாவில் சுற்றுலா வளர்ச்சி.

**அலகு 2:**

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சி – பன்னாட்டுப் பயணிகள் - சுற்றுலாவின் விளைவுகள்.

**அலகு 3:**

சுற்றுலாப் பயணிகள் திட்டமிடல் - சுற்றுலாக் கழகங்கள் - பயண முகவர்கள்.

**அலகு 4:**

சுற்றுலாவின் வணிகச் சந்தைகள் - வழிகாட்டிகள் - பயண நூல்கள்.

**அலகு 5:**

சுற்றுலாவின் முக்கியத்துவம் - சுற்றுலா செல்வதற்குரிய இடங்கள்.

**பாடநோக்கம்:**

மனிதனின் மன இறுக்கத்தைத் தணிப்பதற்காகப் பயன்படும் சுற்றுலாவின் முன்னோடிகள் பற்றியும், நம்நாட்டிலும் உலக அளவிலும் சுற்றுலா எவ்வாறு வளர்ந்துள்ளது என்பது பற்றியும் மாணவர்கள் அறியச் செய்தல்.

**பாடநூல்:**

முனைவர். ச. ஈஸ்வரன் - 'சுற்றுலாவியல்'
பாவை பப்ளிகேஷன்ஸ்,
142, ஜானிஜான் கான் சாலை,
இராயப் பேட்டை, சென்னை-14.

**பார்வை நூல்கள்:**

1. டாக்டர். A. சுவாமிநாதன் - 'சுற்றுலா'
   தீபா பதிப்பகம்,
   99, வீரவாஞ்சிநாதன் தெரு,
   சென்னை-96.
2. வே. திருநாவுக்கரசு - 'தமிழ்நாட்டில் சுற்றுலா'
   வசந்தா பிரசுரம், 6, ஜெய்சங்கர் தெரு,
   மேற்கு மாம்பலம், சென்னை-600033.

## திறன்சார் விருப்பப் பாடம் : தாள் 6

(Skill Based Elective course)

### சித்தர்கள் தத்துவம்

**அலகு 1:**

சித்தர்களின் சிறப்பு - சித்தர்களின் விஞ்ஞான ஆராய்ச்சி - சித்தர்களின் கொள்கை.

**அலகு 2:**

பாம்பாட்டிச் சித்தர் - இடைக்காட்டுச் சித்தர் - அகப்பேய்ச் சித்தர்.

**அலகு 3:**

குதம்பைச் சித்தர் - கடுவெளிச் சித்தர் - அகத்தியர் ஞானம் - அழுகணிச் சித்தர் - கொங்கணச் சித்தர் - வால்மீகர் ஞானம்.

**அலகு 4:**

காகபுசுண்டர் - சிவவாக்கியர்.

**அலகு 5:**

ஞான வெட்டியான் - ஔவையார் ஞானக் குறள்.

**பாடநோக்கம்:**

சித்தர்களின் தத்துவங்கள் வரலாறுகள் பற்றிய மேல்வரம்பான செய்திகளை மாணவர்கள் அறியச்செய்தல்.

**பாடநூல்:**

சாமி. சிதம்பரனார் - 'சித்தர்கள் கண்ட விஞ்ஞானம் தத்துவம்'
தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்,
41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,
அம்பத்தூர், சென்னை-600098.

**பார்வை நூல்கள்:**

1. ஸ்ரீதேவநாத ஸ்வாமிகள் - "பதினெட்டு சித்தர்களின் வாழ்வும் வாக்கும்'
நர்மதா பதிப்பகம், 10, நானா தெரு,
தி.நகர், சென்னை-600017.
2. நாஞ்சில் ஸ்ரீ விஷ்ணு – "சிந்தையுள் உறைந்த சித்தர்கள்"
லியோ புக் பப்ளிஷர்ஸ், நெ.50, 1-வது மெயின்ரோடு,
சென்னை-35.
3. ஆ. கருணாநிதி - "சித்தர் இலக்கியங்களில் சமூகப் பார்வை"
பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை-600014.

## துறை சாரா விருப்பப் பாடம் : தாள் 2

## (Non Major Elective Course)

### பேச்சுக்கலை

**அலகு 1:**

மேடையில் சொல்மரபுகள் -- பொருள் அமைப்பு வரன்முறை – சுவைததும்ப அமைத்தல் - மேடைப் பேச்சில் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளும், பண்பாட்டு நெறிமுறைகளும் - தலைப்பை நன்கு புரிந்து கொள்ளுதல் - தலைப்பையொட்டி செய்திகளைச் சேகரித்தல் - சேகரித்த செய்திகளைப் பேசுவதற்கு ஏதுவாக வரிசைப்படுத்துதல் - உரியகால எல்லைக்குள் பேச்சை முடித்தல் - மேடை நாகரிகம்.

**அலகு 2:**

மேடைப்பேச்சின் அடிப்படைகள் - பேச்சாளன் - கருத்து – அவையோர் - தொடர்புக்கருவி – காலவாய்ப்பு – அறிந்தபேச்சு – தனி உரையாடல் போலிருப்பது – படைப்பாற்றல் மிளிர்வது – குறிப்பிட்ட நோக்கமுடையது – பயனள்ள பொருளுடையது – சிறந்த உள்ளடக்கம் கொண்டது – கருத்தொழுங்கு பிறழாதது – ஆர்வத்தைத் தூண்டி கவனத்தைக் கவர்வது – குரலையும் உடலையும் சிறப்பாகப் பயன்படுத்துவது.

**அலகு 3:**

சிறந்த பேச்சாளர் - பண்பு – அறிவு – திறமை – தன்னம்பிக்கை - வரவேற்புரை – நன்றியுரை – கடைபிடிக்க வேண்டியவை தவிர்க்கப்பட வேண்டியவை – பட்டிமன்றத்தின் தோற்றம் வளர்ச்சி, வரலாறு – பட்டிமன்றத்தின் அமைப்பும், அழகும் - பட்டிமன்றத்தின் பயன்கள் - வழக்காடு மன்றம் - வழக்காடு மன்றத்தின் அமைப்பு – வழக்காடு மன்றத்தின் அழகு – வழக்காடு மன்றத்தின் நடைமுறை – பயன்பாடுகள்.

**அலகு 4:**

மேடைப்பேச்சின் வகைகள் - இலக்கிய மேடைகளின் தனித்தன்மை - சமய மேடைகளின் தனித்தன்மை – அரசியல் மேடைகளின் தனித்தன்மை – செயற்பாட்டு நெறிமுறைகள் - சிறப்புரை – மேடைத்தமிழில் சிறப்புரையின் பங்கு – சிறப்புரையாளர் கருத்துரை – கருத்துரை வழங்கும் முறை – சுழலும் சொற்போர் - சுழலும் சொற்போரின் அமைப்பு.

**அலகு 5:**

ஆட்சி மன்றக்குழு கூட்டங்கள் - ஆட்சிமன்றக்குழுவின் நடைமுறை – ஆட்சிமன்றக் குழுக் கூட்டங்களின் செயற்பாடுகள் சட்டமன்ற நாடாளுமன்ற பேச்சுவகைகள் - சபாநாயகர் - ஆளுங்கட்சித்தலைவர் - எதிர்க்கட்சித்தலைவர் - பாராளுமன்ற உறுப்பினர்கள் (சிறந்த மேடைப் பேச்சாளர்கள் – திரு. வி. கல்யாணசுந்தரம் - ச.சோமசுந்தரபாரதியார் - ஈ.வெ. இரா.

– ரா.பி.சேதுப்பிள்ளை – ஔவை சு. துரைசாமி – கி.ஆ.பெ. விசுவநாதம் - சி.என். அண்ணாதுரை – உ. முத்துராலிங்கதேவர் - ப. ஜீவானந்தம் - ம.பொ. சிவஞானம் )

**பார்வை நூல்கள்:**

1. டி.எம். காளியப்பா - 'மேடையில் பேசுவது எப்படி?' பிரேமா பிரசுரம், சென்னை-24.
2. அ.கி. பரந்தாமனார் - 'பேச்சாளாராக' பாரி நிலையம், சென்னை-108.
3. குமரி அனந்தன் - 'நீங்களும் பேச்சாளராகலாம்' பாரிநிலையம், சென்னை-108.

## ஐந்தாம் பருவம்

## முதன்மைப் பாடம் : தாள் 6

## இலக்கணம் - 4

## (யாப்பருங்கலக் காரிகை ஒழிபியல் நீங்கலாக)

**அலகு 1:**

உறுப்பியல்: சிறப்புப் பாயிரம், அவையடக்கம், எழுத்து, அசை, சீர், தளை, அடி.

**அலகு 2:**

உறுப்பியல்: தொடை, தொடை விகற்பம்.

**அலகு 3:**

செய்யுளியல்: பாக்களின் அடியும் ஓசையும், வெண்பா வகை, வெண்பாவினம்.

**அலகு 4:**

செய்யுளியல்: ஆசிரியப்பா வகையும் அதன் இனமும், கலிப்பாவும் அதன் இனமும்.

**அலகு 5:**

வஞ்சிப்பா வகை, வஞ்சிப்பாவினம், மருட்பா.

**பாடநோக்கம்:**

யாப்பிலக்கணம் கற்பித்தல்.

## முதன்மைப் பாடம் : தாள் 7

## காப்பியங்கள்

**அலகு 1:**

அ. சிலப்பதிகாரம்: கனாத்திறமுரைத்த காதை

ஆ. மணிமேகலை: ஆபுத்திரன் திறம் அறிவித்த காதை.

**அலகு 2:**

சீவக சிந்தாமணி: கோவிந்தையார் இலம்பகம்

**அலகு 3:**

கம்பராமாயணம்: இலங்கை கேள்விப்படலம்

**அலகு 4:**

பெரிய புராணம்: திருநாளைப்போவார் புராணம்.

**அலகு 5:**

தேம்பாவணி: நாட்டுப்படலம் (முதற்காண்டம்)

**பாடநோக்கம்:**

வெவ்வேறு மதத்தைத் சார்ந்த காப்பியங்களின் கருத்தமைப்பு, வடிவம், கற்பனை, வருணனை, அணிகள், ஆகிய கூறுகளைக் கற்பித்தல்.

**குறிப்பு:** முதலிரண்டு அலகுகளிலிருந்து மட்டும் இடம் சுட்டிப் பொருள் விளக்கும் வினாக்கள் அமையும்.

**முதன்மைப் பாடம் : தாள் 8**

**சமயப்பாடல்கள்**

**அலகு 1:**

(அ) திருஞான சம்பந்தர் - தேவாரம் - கோளறு பதிகம் (வேயுறு தோளிபங்கன்)

(ஆ) திருநாவுக்கரசர் - தேவாரம் - திருவையாறு (மாதர் பிறைக்கண்ணி)

(இ) சுந்தரர் - தேவாரம் - திருப்புகளூர் பதிகம் (தம்மையே புகழ்ந்து)

(ஈ) மாணிக்கவாசகர் - திருவாசகம் - திருக்கோத்தும்பி - 10 பாடல்கள்

( “பூ ஏறுகோனும்” முதல் “நோயுற்று” பாடல் வரை)

**அலகு 2:**

(அ) நம்மாழ்வார் - ஆறாம் திருவாய்மொழி இரண்டாம் பத்து

(வைகுந்தா மணிவண்ணனே முதல் 11 பாடல்கள்)

(ஆ) பொய்கையாழ்வார் - முதல் 20 பாடல்கள்

(இ) ஆண்டாள் - நாச்சியார் திருமொழி – ஆறாம் திருமொழி.

அலகு 3:

(அ) காரைக்காலம்மையார் - அற்புதத்திருவந்தாதி 1-20 பாடல்கள்.

(ஆ) திருமூலர் - திருமந்திரம் - முதல் தந்திரம் - செல்வ நிலையாமை.

(இ) வள்ளலார் - திருவருட்பா – ஆறாம் திருமுறை (அப்பா நான் பற்பலகால்)

**அலகு 4:**

(அ) மஸ்தான் சாகிபு பாடல்கள் - "தவமே பெற வேண்டுமெனல்" (ஓடி அலைந்து)

(ஆ) கண்ணதாசன் - இயேசு காவியம் - பாடுகளின் பாதை.

**அலகு 5:**

(அ) இடைக்காட்டுச் சித்தர் - நாராயணக் கோன் கூறுதல் - 13 பாடல்கள்.

(ஆ) பட்டினத்தார் - ஞானம் - முதல் 10 பாடல்கள்.

(இ) பாம்பாட்டி சித்தர் - அகப்பற்று நீக்கல் - 70 முதல் 80 வரையிலான பாடல்கள்

**பாடநோக்கம்:**

சமய இலக்கியங்களில் புலப்படும் பக்திச் சுவை, மெய்ப்பாடுகள், தத்துவங்கள், கற்பனை ஆகிய கூறுகளை அறிதல்.

**குறிப்பு:** முதலிரண்டு அலகுகளிலிருந்து மட்டும் இடம் சுட்டிப் பொருள் விளக்கும் வினாக்கள் அமையும்.

## முதன்மைப் பாடம் : தாள் 9

## திராவிட மொழிகளின் ஒப்பாய்வியல்

**அலகு 1:**

திராவிட மொழிக்குடும்பம் - தென் திராவிடம் - நடுத்திராவிடம் - வடதிராவிடம் - திராவிட மொழிகளின் தனித்தன்மைகள்.

**அலகு 2:**

ஒலி பிறப்பு – உயிரொலி மாற்றம் - மெய்யொலி மாற்றம் - உருபன்களும் சொல்லாக்கமும்.

**அலகு 3:**

பெயர்கள் - திணை, பால், இடம், எண் உணர்தல் - வேற்றுமைகள் - மூவிடப்பெயர்கள் - எண்ணுப்பெயர்கள்.

**அலகு 4:**

வினைச் சொற்களின் அமைப்பு – வினை வகைகள் - வினைச் சொற்கள் காலம் காட்டும் முறை – எச்சங்களும் முற்றுகளும் - வினைப் பெயர்கள் - வினைப் பொருட்கள்.

**அலகு 5:**

திராவிட மொழிகளின் சொற்றொடரமைப்பு.

**பாடநோக்கம்:**

திராவிட மொழிக்குடும்பத்தின் தாய் தமிழே என்பதனை நிறுவுவதற்கான மொழியியல் ஒப்பாய்வு முறையைக் கற்பித்தல்.

**பாடநூல்:**

டாக்டர். ஜி. ஜான் சாமுவேல் - 'திராவிட மொழிகளின் ஒப்பாய்வு' ஆசியவியல் நிறுவனம், சென்னை-600119.

**பார்வை நூல்கள்:**

1. கால்டுவெல் 'ஒப்பிலக்கணம்' - சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
2. டாக்டர். ரா. சீனிவாசன் - 'மொழி ஒப்பியலும் வரலாறும்' அணியகம், சென்னை-30.

## விருப்பப் பாடம் : தாள் 2

## பொதுமொழியியல்

**அலகு 1:**

மொழியும் மொழியியலும் - ஒலியியல் - ஒலியுறுப்புகள் - உயிரொலிகள் - மெய்யொலிகள் - ஒலியன்கள் - மாற்றொலியன்கள்.

**அலகு 2:**

உருபனியல் - உருபன்கள் - மாற்றுருபன்கள் - நைடாவின் விதிகள் - உருபொலியன்கள் - சொல் வகைகள் - மீட்டுருவாக்கம்.

**அலகு 3:**

சொற்றொடரியல் - அண்மை உறுப்புப் பகுப்பாய்வு – மாற்றிலக்கணக் கோட்பாடு – ஆக்கமுறை இலக்கணம் மாற்றல்.

**அலகு 4:**

பேச்சு மொழி – மொழியில் கடன் வாங்கல் - சொற்பொருள் மாற்றம் - சொற்பொருள் உறவும் சொல் வகைப்பாடும் - சொற்பொருட் கூறுகள் - பொருளுறவும் சொல்வகைப்பாடும் - பொருட்பன்மை – ஒரு பொருட் பன்மொழி – எதிர்ப்பொருண்மை.

**அலகு 5:**

சமுதாய மொழியியல் - மொழியியலும் பிறதுறைகளும் - பேச்சுமொழி – கிளை மொழிகள் - மொழி கற்பித்தல் - மானிடவியல் - சமூகவியல் - அகராதியியல்.

**பாடநோக்கம்:**

ஒரு மொழியின் அகப்பகுப்பாய்வுக்கு அடிப்படையான மொழியியல் கூறுகளை அறிவித்தல்.

**பாடநூல்:**

டாக்டர். முத்துச் சண்முகன் - 'இக்கால மொழியியல்'
முல்லை நிலையம், 9 பாரதி நகர்,
தி.நகர். சென்னை-17.

**பார்வை நூல்கள்:**

1. டாக்டர். மு. வரதராசன் - 'மொழிநூல்'
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை.
2. கு. பரமசிவன் - 'இக்கால மொழியியல் அறிமுகம்'
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,
சென்னை.
3. டாக்டர். பொற்கோ - 'பொது மொழியியல்'
பூம்பொழில், சாத்திரி நகர்,
சென்னை-600020.

## சார்புப் பாடம் : தாள் 5

## நாடகத்தமிழ்

**அலகு 1:**

உலகில் நாடகத் தோற்றம் - தமிழில் நாடகத் தோற்றம் - அகத்தியர், தொல்காப்பியர் காலத்தில் நாடகம் - சங்க காலத்தில் நாடகம்.

**அலகு 2:**

பல்லவர் காலம் - சோழர் காலம் - நாயக்கர் மராத்தியர் காலத்தில் நாடகங்கள்.

**அலகு 3:**

நாடக வகைகள் - தெருக் கூத்து – குழந்தை நாடகம் - வானொலி நாடகம் - மொழி பெயர்ப்பு நாடகம் (ஷேக்ஸ்பியர் நாடகங்கள், வடமொழி மொழி பெயர்ப்பு நாடகங்கள், மறைமலையடிகளாரின் மொழி பெயர்ப்பு, பண்டிதமணி மொழிபெயர்ப்பு, ஆங்கில மொழி பெயர்ப்பு நாடகங்கள்)

**அலகு 4:**

அமெச்சூர் நாடகம் - ஓரங்க நாடகம் - மேடை நாடகம் - அரங்குகள் - நேரம்.

**அலகு 5:**

நாடகத் துறைக்குப் புதுமை செய்தவர்கள் - பரிதிமாற் கலைஞர் - சங்கரதாஸ் சுவாமிகள் - எம். கந்தசாமி முதலியார் - சி. கன்னைய நாயுடு – எஸ். ஜி. கிட்டப்பா –

பம்மல் சம்பந்த முதலியார் - என்.எஸ்.கிருஷ்ணன் - சி.என். அண்ணாதுரை – டி.கே. சண்முகம் - நவாப் இராசமாணிக்கம் - எம்.ஆர்.இராதா – விசுவநாததாஸ்.

**பாடநோக்கம்:**

மூவாத் தமிழில் மூன்றாம் தமிழான நாடகத் தமிழின் தோற்றம் வளர்ச்சி குறித்து மாணவர்கள் அறியச் செய்தல்.

**பாடநூல்:**

டாக்டர். ஆறு. அழகப்பன் - 'தமிழ் நாடகம் தோற்றமும் வளர்ச்சியும்' அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீடு.

**பார்வை நூல்கள்:**

1. எஸ்.வி.சகஸ்ரநாமம் - 'நாடகக் கலையின் வரலாறு' மதுரைப் பல்கலைக் கழகம் பல்கலை நகர், மதுரை.
2. தி.க. சண்முகம் - நாடகக் கலை' அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்.
3. டாக்டர். ஆறு. அழகப்பன் - 'மேடை நாடகங்கள்' பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1.
4. நா. ஞானசேகரன் - 'இருபது நூற்றாண்டுகளில் தமிழ் நாடகக்கலை' புத்தகச்சோலை பதிப்பகம், 48, மகாதானத்தெரு, மயிலாடுதுறை-609001, நாகை மாவட்டம்.

**ஆறாம் பருவம்**

**முதன்மைப் பாடம் : தாள் 11**

**இலக்கணம் - 5**

(தண்டியலங்காரம் பொருளணியியல்)

**அலகு 1:**

தன்மை, உவமை, உருவகம்.

**அலகு 2:**

தீவகம், பின்வருநிலை, முன்னவிலக்கு, வேற்றுப் பொருள் வைப்பு, வேற்றுமை, விபாவனை.

**அலகு 3:**

ஒட்டணி, அதிசயம், தற்குறிப்பேற்றம், ஏது, நுட்பம், இலேசம், நிரல்நிறை.

**அலகு 4:**

ஆர்வமொழி, சுவை, தன்மேம்பாட்டுரை, பரியாயம், சமாகிதம், உதாத்தம், அவநுதி, சிலேடை, விசேடம்.

**அலகு 5:**

ஒப்புமைக் கூட்டம், விரோதம், மாறுபடு புகழ்நிலை, புகழாப் புகழ்ச்சி, நிதரிசனம், புணர்நிலை, பரிவருத்தனை, வாழ்த்து, சங்கீரணம், பாவிகம்.

**பாடநோக்கம்:**

தமிழின் ஐந்தாம் இலக்கணமாகிய அணியிலக்கண வகைகளைக் கற்பித்தல்.

**முதன்மைப் பாடம் : தாள் 11**

**சங்க இலக்கியம்**

**அலகு 1:**

முல்லைப்பாட்டு

**அலகு 2:**

அ. குறுந்தொகை – கபிலர் பாடல்கள் - 20.

பாடல் எண்கள்: 13,18,25,38,42,87,95,100,106,115,121,142,153,187,198,208,225,241, 246,249.

ஆ. கலித்தொகை – முல்லைக்கலி – முதல் 3 பாடல்கள்

("தளிபெறு" பாடல் முதல் "மெல் இணர்க்கொன்றை" வரை)

**அலகு 3:**

(அ) அகநானூறு: பாலைத்திணை - மாமூலனார் பாடல்கள் - 10.

பாடல் எண்கள்: 1,15,31,55,61,65,91,97,101,115.

(ஆ) பரிபாடல்: 13 ஆம் பாடல் - திருமால்

**அலகு 4:**

(அ) நற்றிணை – ஔவையார் பாடல்கள் - 7

பாடல் எண்கள்: 129,187,295,371,381,390,394.

(ஆ) ஐங்குறுநூறு 1. நெய்தற்பத்து

2. கிள்ளைப்பத்து

**அலகு 5:**

(அ) புறநானூறு – ஏணிச்சேரி முடமோசியார் பாடல்கள் - 10

பாடல் எண்கள்: 13,127,128,129,130,131,132,133,134,135.

(ஆ) பதிற்றுப்பத்து – நான்காம் பத்து – முதல் 5 பாடல்கள்.

**பாடநோக்கம்:**

பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்களிலுள்ள பாடல்கள் சிலவற்றின் மூலம் அகப்பொருள், புறப்பொருள் பற்றிய சுவையைக் கற்பித்தல்.

**குறிப்பு:** முதலிரண்டு அலகுகளிலிருந்து மட்டும் இடம் சுட்டிப் பொருள் விளக்கும் வினாக்கள் அமையும்.

**முதன்மைப் பாடம் : தாள் 12**

**நீதி இலக்கியம்**

**அலகு 1:**

(அ) திருக்குறள்: 1. ஊழ்

2. மடியின்மை

(ஆ) நாலடியார்: 1. இளமை நிலையாமை

2. அவையறிதல்

**அலகு 2:**

(அ) பழமொழி நானூறு – முதல் 20 பாடல்கள்

(ஆ) இன்னா நாற்பது – 21 முதல் 40 வரையிலான பாடல்கள்

(இ) ஆசாரக் கோவை – 51 முதல் 60 வரையிலான பாடல்கள்

**அலகு 3:**

(அ) ஏலாதி – 41 முதல் 50 வரையிலான பாடல்கள்

(ஆ) திரிகடுகம் 31 முதல் 40 வரையிலான பாடல்கள்

(இ) சிறுபஞ்சமூலம் - முதல் 20 பாடல்கள்

**அலகு 4:**

ஔவையார்: (அ) வாக்குண்டாம் (30 பாடல்கள்)

(ஆ) நல்வழி – முதல் 20 பாடல்கள்

**அலகு 5:**

(அ) குமரகுருபர சுவாமிகள்: நீதிநெறி விளக்கம் - 51 முதல் 70 வரையிலான பாடல்கள்

(ஆ) சிவப்பிரகாச சுவாமிகள்: நன்னெறி - முதல் 20 பாடல்கள்

**பாடநோக்கம்:**

நல்வாழ்வுக்குகந்த அறங்களை வழிவழி வந்தோரின் வாக்குகளால் உணர்த்தல்.

**குறிப்பு:** முதலிரண்டு அலகுகளிலிருந்து மட்டும் இடம் சுட்டிப் பொருள் விளக்கும் வினாக்கள் அமையும்.

## முதன்மைப் பாடம் : தாள் 13

## இலக்கியத் திறனாய்வியல்

**அலகு 1:**

இலக்கியம் என்றால் என்ன? இலக்கியக்கலை - இலக்கியத்திறனாய்வு – திறனாய்வு பற்றிய விளக்கங்கள் - தமிழில் திறனாய்வு – திறனாய்வு வகைகள் - திறனாய்வு அணுகு முறைகள் - திறனாய்வாளனின் தகுதிகளும் கடமைகளும் - திறனாய்வினால் உண்டாகும் நன்மைகளும் தீமைகளும்.

**அலகு 2:**

இலக்கிய வகைகள்: புதுக்கவிதை – மரபுக் கவிதை – உரைநடை – சிறுகதை – புதினம் - ஓரங்க நாடகம் - நாடகம் - கட்டுரை வகைகள் - இரங்கற்பா – கதைப்பாடல்கள் - சிற்றிலக்கியங்கள் - காப்பியங்கள் - தன்னுணர்ச்சிப் பாடல்கள் - நாட்டுப்புற இலக்கியங்கள்.

**அலகு 3:**

இலக்கியக் கூறுகள்: கற்பனை – விளக்கம் - கற்பனை வகைகள் - வருணனை.

**அலகு 4:**

இலக்கியக் கூறுகள்: அணிகள் - யாப்பு – சொல்லாட்சி – உணர்ச்சி – கருத்து – வடிவம்.

**அலகு 5:**

இலக்கிய இயக்கங்கள்: புனைவியல் - செவ்வியல் - நடப்பியல் - குறியீட்டியல் - படிமவியல் - மெய்ம்மையியல் - கலை கலைக்காகவா? வாழ்க்கைக்காகவா? - இருத்தலியல் - வீரயுகக்காலம் - பக்தி இயக்கம் - மேனாட்டுத் தாக்கம்.

**பாடநோக்கம்:**

ஓர் இலக்கியத்தின் முழுத்திறனும் அதன் திறனாய்வில் தான் வெளிப்பட முடியும் என்ற கொள்கைக்கேற்ப இலக்கியம் பயில்வோர்க்கு அவற்றை மதிப்பிடுவதற்கான வழிமுறைகளைக் காட்டுவதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

**பாடநூல்:**

முனைவர். சு. பாலச்சந்திரன் - **'**இலக்கியத் திறனாய்வு'
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-600098.

**பார்வை நூல்கள்:**

1. அ.ச. ஞானசம்பந்தன் - 'இலக்கியக்கலை'
   பாரி நிலையம், 59, பிராட்வே,
   சென்னை-1.
2. தா.ஏ. ஞானமூர்த்தி - 'இலக்கியத் திறனாய்வியல்'
   யாழ் வெளியீடு, மூன்றாம் தெரு,
   தென்றல் குடியிருப்பு, மேற்கு அண்ணாநகர்,
   சென்னை-60004..
3. டாக்டர். மு.வ. – 'இலக்கியத் திறன்'
   பாரி நிலையம், 59, பிராட்வே,
   சென்னை-1.

## விருப்பப் பாடம் : தாள் 3

## செயல்முறைத் தமிழ்

**அலகு 1:**

செய்யுள் நலம் பாராட்டல் - மோனை, எதுகை, .இயைபு, கருத்து, வடிவம் பற்றித் திறனாய்தல் - கொடுக்கப்பட்ட செய்யுளின் கருத்தினை எழுதுதல் - அணிகளைக் கண்டறிதல்.

**அலகு 2:**

புதுக்கவிதை – மரபுக்கவிதை புனைதல்.

**அலகு 3:**

சிறுகதை எழுதுதல் - ஓரங்க நாடகம் ஆக்கல்.

**அலகு 4:**

பிழை நீக்கி எழுதுதல் - பிறமொழிச் சொற்களுக்குத் தமிழாக்கம் தருதல் - அலகிட்டு அசை, சீர், தளைகளைக்குறிப்பிடல் - மயங்கொலிச் சொற்பொருள் வேறுபாடு கண்டறிதல் - வலி மிகு இடங்களும், மிகா இடங்களும் - சந்தி விதிகள் - சொற்றொடர் மாற்றம். (தன்வினை -> பிறவினை; செய்வினை -> செயப்பாட்டு வினை; உடன்பாட்டு வினை -> எதிர்மறை வினை; நேர்கூற்று -> அயற்கூற்று;)

**அலகு 5:**

கடிதம் எழுதுதல் - விண்ணப்பம் எழுதும் முறை – ஆங்கிலத்தில் உள்ள அலுவலகக் கடிதத்தைத் தமிழில் மொழி பெயர்த்தல்.

**பாடநோக்கம்:**

ஆறு பருவங்களிலும் பயின்ற தமிழ்ப் புலமையை மதிப்பிடல் - படைப்பிலக்கியத் திறனை வளர்த்தல்.

**பார்வை நூல்கள்:**


1. அ.கி. பரந்தாமனார் - 'நல்ல தமிழ் எழுத வேண்டுமா'
   பாரி நிலையம், 184 – பிரகாசம் சாலை,
   சென்னை – 600108.
2. கா. பட்டாபிராமன் - 'மொழிப் பயன்பாடு'
   நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர்,
   சென்னை – 600090.
3. கோ. இளையபெருமாள் - 'தமிழில் பிழையின்றி எழுதுவது எப்படி?'
   வானதிப் பதிப்பகம், 23, தீனதயாளு தெரு,
   தி.நகர், சென்னை-17.
4. டாக்டர். பொற்கோ – 'தமிழில் நாமும் தவறில்லாமல் எழுதலாம்'
   பூம்பொழில் வெளியீடு, 16, ஆறாவது குறுக்குத்தெரு,
   சாஸ்திரி நகர், அடையாறு, சென்னை – 20.
5. கி.வா. ஜெகந்நாதன் - 'கவிபாடலாம்'
   மணிவாசகர் நூலகம், சென்னை – 600001.
6. மு. சுதந்திரமுத்து – 'படைப்புகள்'
   சுவடு பதிப்பகம், சென்னை-24.

## சார்புப் பாடம் : தாள் 6

## நாட்டுப்புறவியல்

**அலகு 1:**

நாட்டுப்புற இலக்கியம் - விளக்கம் - நாட்டுப்புறவியலின் வரலாறு – தொல்காப்பியத்தில் நாட்டுப்புற இலக்கியக் கூறுகள் - இந்திய நாட்டுப்புறவியல் - தமிழக நாட்டுப்புறவியலின் வரலாறு – ஏட்டிலக்கியங்களுள் நாட்டுப்புற இலக்கியத் தாக்கம் - சங்க இலக்கியங்களில் நாட்டுப்புற இலக்கியக் கூறுகள்.

**அலகு 2:**

தாலாட்டு – ஒப்பாரி – விடுகதை – பழமொழி – நாட்டுப்புறக் கதைகள் - (நல்ல தங்காள் கதை, முத்துப்பட்டன் கதை, தேசிங்குராஜன் கதை).

**அலகு 3:**

நாட்டுப்புறக் கலைகள் - கும்மி – கோலாட்டம் - கரகாட்டம் - மயிலாட்டம் - ஒயிலாட்டம் - பொய்க்கால் குதிரை – பொம்மலாட்டம் - தோற்பாவை.

**அலகு 4:**

நாட்டுப்புற நம்பிக்கைகள் - விழாக்கள் - சடங்குகள் - விளையாட்டுக்கள் - வட்டாரச் சொற்கள் - நாட்டுப்புறவியலும், சமூகவியலும்.

**அலகு 5:**

நாட்டுப்புறவியலும் மொழியியலும் - நாட்டுப்புற இலக்கியக் கூறுகள் - எதுகை – மோனை - இயைபு – கற்பனை – அணிகள் - உணர்ச்சி – கருத்தமைப்பு.

**பாடநோக்கம்:**

அழிந்து வரும் நாட்டுப்புற இலக்கிய வகைகளுள் உள்ள இலக்கியத் தரங்களை மதிப்பிடுதலும் அவற்றை அழியாமல் பாதுகாத்தலும்.

**பாடநூல்கள்:**

1. சு. சக்திவேல் - 'நாட்டுப்புறவியல் ஆய்வு'
   மணிவாசகர் பதிப்பகம், பாரிமுனை.
2. ஆர். சண்முகசுந்தரம் - 'நாட்டுப்புறவியல் ஆய்வு'
   காவ்யா,
   கோடம்பாக்கம், சென்னை-600024.

**பார்வை நூல்கள்:**


1. நா. வானமாமலை – 'தமிழர் நாட்டுப்பாடல்கள்'
   நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98.
2. முனைவர். ஆறு. இராமநாதன் - 'நாட்டுப்புறவியல்'
   மணிவாசகர் பதிப்பகம்,
   சென்னை-600108.
3. முனைவர். க. வெங்கடேசன் - 'பழந்தமிழர் வாழ்வியல்'
   திருவேங்கடம் பதிப்பகம், கோட்டூர்,
   அங்கினாயனப்பள்ளி, பருகூர்-635104.